மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்களுக்கான (Vocational) பகுதிநேர ஆசிரியர்களாகப் பணி புரிபவர்கள் ஊதியத்தை ரூ. 150-லிருந்து உயர்த்திட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு, இதுகுறித்து, பரிசீலிக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, இரண்டு பகுதி நேர ஆசிரியர்களும் சேர்ந்து ரூ. 300 வாங்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பத்து பாட வேளை இருந்தால்தான், ஒரு பகுதி நேர ஆசிரியர் பணிக்கு ரூ. 150 ஊதியமாக வழங்கப்பட வேண்டும் என்று ஆணை உள்ளது. அதையடுத்து ஒரு பாட வேளையை உடற் பயிற்சிக்காக ஒதுக்கிட வேண்டும் என்று அரசு ஆணையிட்டதன் காரணமாக பத்து பாட வேளையாக இருந்தது தற்போது ஒன்பது பாட வேளையாகக் குறைந்துள்ளது. எனவே இரண்டு பகுதி நேர ஆசிரியர்கள் இருக்கிற இடங்களில் 18 பாட வேளைகளாகக் குறைந்துள்ளன. இதன் காரணமாக ஒரே ஒரு பகுதி நேர ஆசிரியருக்கான ஊதியமான ரூ. 150 மட்டுமே வழங்குகிறார்கள். எனவே இந்த நிலைமையைத் திருத்தி ஒன்பது பாட வேளையாக இருந்தாலும் - அது கல்வித் துறையின் ஆணைக்கேற்ப குறைக்கப்பட்ட காரணத்தால் - இரண்டு பகுதி நேர ஆசிரியர்களுக்கும் ரூ. 300, அதாவது ஒவ்வொருவருக்கும் ரூ. 150 என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்ற ஆணையை அரசு வெளியிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் எழுத்துக்கள்

*106. **வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் எழுத்துக்களை, இயந்திரங்களில் எளிதாகப் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ் எழுத்துக்களின் வரி வடிவங்களை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழு புனரமைக்கப்பட்டுள்ளது. அது தமிழ் எழுத்துக்களை தட்டச்சு மற்றும் தொலையச்சு (Teleprinter) ஆகியவற்றிலும், அச்சகங்களிலும் எளிதாக எடுத்தாளத் தக்க பரிந்துரைகள் செய்தால், அவற்றைச் செயலாக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே. கல்வி நிலையங்களிலும், அரசு நிலையங்களிலும் தமிழ் எழுத்துக்களின் மூலமாகத்தான் தொடர்பு கொள்ள வேண்டும். அரசு அலுவலகங்களைப் பொறுத்தவரை, நிறைய தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் இருக்கின்றன. ஆனால் அநேக உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் தட்டச்சுப் பொறிகள் இல்லாத காரணத்தால் வேதனைக்குள்ளாகிற நிலைமை ஏற்படுகிறது. இது மூல வினாவிற்குத் தொடர்புடையதாக இல்லாவிட்டாலும்கூட, நான் குறிப்பிட்ட இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தட்டச்சுப் பொறிகளைக் குறைந்த விலையில் உடனடியாக அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்கிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பள்ளிகளில் மட்டுமல்ல, அரசு அலுவலகங்களிலும்கூட ஆங்கிலத் தட்டச்சுக்களே இருக்கிற காரணத்தால், தமிழ் ஆட்சி மொழியாவது பெருமளவுக்குத் தடைப்பட்டு வந்திருக்கிறது. எனவேதான் அந்தக் குறையை உணர்ந்து இந்த நிலையைப் போக்கிட கடந்த இரண்டு மூன்று மாதங்களாகவே தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலமாக 500-க்கும் மேற்பட்ட ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் பல மாற்றப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. அந்த வகையில் ஆங்கிலப் தட்டச்சுப் பொறிகள் தமிழ் தட்டச்சுப் பொறிகளாக மாற்றப்படுகிற பணி வேகமாக நடைபெறுகிறது.

டாக்டர் இரா.. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறை வந்து சில ஆண்டுகளாகின்றன. என்றாலும் தமிழ் நூல்களில் எழுத்துச் சீர்திருத்த முறை மேற்கொள்ளப்படவில்லையே ? எனவே அப்படிப்பட்ட நூல்களை நூலகங்கள் வாங்கக்கூடாது என்று அரசு ஆணையிட முன்வருமா ? அதைப் போலவே தமிழ் செய்தித் தாள்களும் தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நாம் தமிழகத்தில் தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறையைக் கொண்டு வந்த பிறகு சிங்கப்பூரிலும் அதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் அதற்காக ஆணையே பிறப்பித்து அங்கே முழுமையாக அது நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் இங்கே அரசு தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த பின்னர், நூல்கள் வெளியிடுகிறவர்களிடமிருந்தும் பத்திரிகையாளர்களிடமிருந்தும் நமக்குப் போதிய ஆதாரவு கிடைக்கவில்லை. ஒரு அறிவியல் ஆதாரத்தின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியாக மொழி வளர்ச்சிக்கும், அதன் மூலமாக மக்களின் நலனுக்கும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும் போது, மக்களுக்குச் சேவை செய்வதாகச் சொல்லிக்கொள்கிற இப்படிப்பட்டவர்கள் அதற்கு ஒத்துழைப்புத் தருவது என்பது மிகவும் வேண்டத்தக்கதாகும். எனவே அப்படிப்பட்டவர்கள் மீண்டும் இதைப்பற்றிச் சிந்தித்து இந்த நல்ல முயற்சிக்கு ஆதாவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூலகங்களில் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளாத நூல்களை வாங்குவதை நிறுத்துவது என்பது நம்மால் செய்ய முடிந்த காரியம்தான் என்றாலும், அதற்கு முன்னர் அனைவருக்கும் நான் இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

குடும்ப ஓய்வு ஊதியம்.

* 107. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1964-க்குப் பின்னும், 1—4—1970-க்கு முன்னும் ஓய்வு பெற்றவர்களின் குடும்ப ஓய்வு ஊதியம் வழங்குவது தொடர்பாக, கல்வித்துறையால் 5—1—1978-ல் வெளியிடப்பட்ட அரசு ஆணை எண் 30-ஐ அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) இதுபற்றி மாநில கணக்காயர் (Accountant-General) அலுவலகத்திலிருந்து அரசிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதா ?

(உ) ஓய்வு ஊதியம் பெறுவதற்கு காலதாமதம் ஆவது பற்றி முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?